c

ாக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

Kokuvil Hindu College Old Students Association - Canada

கல்விசார் போட்டி - 2020

பேச்சு

பிரிவு:- 18 வயதுக்குட்பட்டோர்

# ஆறுவது சினம்

மனிதர்களால் போற்றிக் காக்கப்பட வேண்டிய அரும் பெரும் பண்பு சினம் காத்தல் ஆகும். சினம் என்றால் கோபம் ஆகும். உலகப் பொதுமறை தந்த வான்புகழ் வள்ளுவனார் சினம் காத்தல் எனும் பண்பினை வலியுறுத்தி உள்ளார். இதற்காக ''வெகுளாமை'' எனும் ஓர் அதிகாரத்தைப் பாடி பத்துக் குறள்களில் தனது கருத்தினை தெளிவாகக் கூறி உள்ளார். சினத்தைத் தீயாக உருவகப்படுத்தி தீயினால் விளையும் தீமைகளுடன் ஒப்பிட்டு விளக்கி உள்ளார்.

''சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும்''

தீயானது தீப்பிடித்த இடத்தை மட்டும் அழிப்பதுடன் நின்றுவிடாது சுற்றுப்புறங்களையும் அழித்துவிடும். அதுபோலவே கோபமானது கோபம் கொண்டவனை மட்டுமன்றி அவனது உற்றார் உறவினர்கள் அனைவரையும் அழித்துவிடும். ஒருவனது அகமலர்ச்சியும், முகமலர்ச்சியும் கோபத்தினால் அழிக்கப்படும்.

ஒருவன் தன்னைத்தான் காத்துக்கொள்ள சினம் காக்க வேண்டும். கோபத்தைக் கட்டுப்படுத்தத் தவறினால் கோபம் கொண்டவனையே அது அழித்துவிடும்.

''செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கினென் காவாக்கா''

எங்கே தன் சினம் பலிதமாகுமோ அங்கேதான் ஒருவன் சினம் கொள்ளாமல் இருத்தல் வேண்டும். அதாவது தன் கோபத்திற்குப் பயப்படக்கூடிய மெலியாரிடத்திலே தன்கோபத்தைக் காட்டாது அடக்கிக் கொள்ள வேண்டும். தனக்குப் பயப்படாத தன்னிலும் வலியவரிடத்திலே ஒருவன் கோபம் கொண்டால் அதனால் அவனுக்கே துன்பம் விளையும்.

சினம்காத்தல் பற்றி ஓர் உவமையுடன் அறிவுரைக் கருவூலமான நன்னெறிப்பாடல் சினம்பற்றி இப்படிக் கூறுகிறது.

''உள்ளங் கவர்ந்தெழுந்து ஓங்கு சினங்காத்துக் கொள்ளும் குணமே குணமென்க – வெள்ளம்
தடுத்தல் அரிதோ தடங்கரைதான் பேர்த்து விடுதல் அரிதோ விளம்பு''

பெருகிவரும் வெள்ளத்தைத் தடுப்பதற்கு அணையைக் கட்டுவதா அல்லது அணையை உடைப்பதா என்று நினைத்துப் பாருங்கள். அதுபோன்று உள்ளத்திலே பொங்கியெழும் கோபத்தை அடக்கிக் காப்பதே மிகப்பெரும்
அரிய செயலாகும்.

அறிவிற்குப் பகை கோபம். கோபம் ஒருவனை அறிவுடன் செயற்பட விடாது தடுத்துவிடும். அது தரும் விளைவுகளும் மிகப் பாதகமானவை. அது அழிவைத்தரும், உடல் நலத்தைக் கெடுக்கும், உறவுகளை அழிக்கும், நட்பினை வேரறுக்கும், பிறர் மனங்களை புண்படுத்தும், இறுதியில் அது சினம் கொண்டவனை தனிமைப்படுத்தி விடும்.

இதனாலேயே ஔவையார் இரு சொற்களில் ஆத்திசூடியில் ''ஆறுவது சினம்'' என்று கூறிஉள்ளார். இத்தகைய பெரியார்களின் கருத்துக்களை மனதிற் பதித்து சினத்தைக் காத்து அன்புடன் ஒன்றாக ஒன்றே குலமென வாழ்வோம்.